


ஓவியனின் குருவி

மாக்ஸ்


ஓவியனின் குருவி



பல அருமையான ஓவியங்களை
படைத்த ஒரு ஓவியனின் கதை இது.
பல நல்ல கலைஞர்களைப் போலவே
அவரும் மிக ஏழை தான். தான் படைத்த
அத்தனை ஓவியங்களையும் அவர்
விரும்பினாலும் அவர் மிகவும் நேசித்த
ஓவியம் ஒன்று இருந்தது. விசித்திரமான
அபார அழகுடனான ஒரு குருவியின்
ஓவியம் தான் அது.



ஒரு நாள் ஓவியங்கள் வாங்க வந்த ஒரு பெரும் பணக்காரர் அந்த குருவி ஓவியத்தைக் கண்டு லயித்து நின்றார். என்ன விலை கொடுத்தும் வாங்க விரும்பினார். ஆனால் ஓவியனுக்கோ அந்த ஓவியத்தை விற்க மனமில்லை.
பணக்காரர் ஒரு லட்சம் ரூபாய் தருவதாக பேரம் பேசிய போது ஓவியரால் மறுக்க முடியவில்லை.
பணத்தைக் கொடுத்துவிட்டு ஓவியத்தை எடுத்துச் சென்றார் அந்த செல்வந்தர்.





அந்தப் பணக்காரர் குருவி
ஓவியத்தை தன்னுடைய சிவப்பு
நிற காரில் கொண்டுசென்று
அவருடைய ஒய்யாரமான
மாளிகையில், அடிக்கடி பார்த்து
மகிழும் வகையில், மையமான
ஒரு அறையில் மாட்டி
வைத்தார்.

விசித்திரமான அபார அழகுடனான
அந்தக் குருவிக்கோ இது
பிடிக்கவில்லை. ஓவியரை பிரிந்து
வந்ததில் வருத்தமாய் இருந்தது.
எனவே ஒரு நாள் அந்த ஓவியத்தை
விட்டு வெளியே பறந்துவிட்டது
குருவி.







ஜன்னல் வழியே பறந்த குருவி பூந்தோட்டத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு அழகிய கொண்டையுடன் இருந்த சேவலைக் கண்டது. “அய்யா என்னை வரைந்த ஓவியர் எங்கிருக்கிறார் தெரியுமா? அவர் மிகவும் நல்லவர். பெரிய தாடி வைத்திருப்பார்" என்று கேட்டது குருவி.

“எனக்குத் தெரியாதே. இந்த பூந்தோட்டத்தை விட்டு நான் எங்கும் போனதில்லை. அதோ அந்தக் காட்டில் இருக்கும் பறவைகளை கேட்டுப்பார். பல இடங்களுக்கு பறக்கும் அவைகளுக்கு தெரிந்திருக்கலாம்” என்றது சேவல்.





காட்டில் இருந்த பறவைகள் ஓவியக் குருவியைக் கண்டு சிரித்தன. “மிக விநோதமாக இருக்கிறாயே. உயிரியல் பூங்கா தான் உனக்கு ஏற்ற இடம். அங்கே ஒரு விலங்கு பெரிய தாடியுடன் இருக்கிறது. அதைத் தான் தேடி அலைகிறாயோ என்னவோ” என்றன.

ஓவியக் குருவி உயிரியல் பூங்காவைத் தேடி பறந்தது. அங்கே ஒரு கூண்டில் பெரிய தாடியுடன் ஒரு பெரிய விலங்கை கண்டு அதன் மீது போய் அமர்ந்தது. அது ஓவியனல்ல, ஒரு சிங்கம்.


சிங்கம் உறுமியது. “நான் தான் எல்லோருக்கும் அரசன். நீ என்னுடைய கிரீடம் போல இருக்கிறாய். சில நாள் இங்கேயே இரு. கிரீடத்துடனிருக்கும் அழகனான என்னை வரைய உன் ஓவியன் வருவான்” என்றது.




ஓவியக் குருவி அங்கேயே தங்கியது. விசித்திரமான பறவையை கிரீடமாக அணிந்திருக்கும் சிங்கத்தைக் காண கூட்டம் கூட்டமாக மக்கள் வந்தனர். ஆனால் ஓவியர் வரவே இல்லை.








உயிரியல் பூங்காவின் உயரதிகாரி சிங்கத்தின் தலைமீது உட்கார்ந்திருந்த அந்த அதிசயமான குருவியை பார்த்து வியந்தார். "இப்படி ஒரு பறவையை இதற்கு முன் பார்த்ததே இல்லை. இதைப் பற்றி ஆராய்ச்சி செய்தால் புகழும் பெயரும் கிடைப்பதோடு இந்த விநோத குருவிக்கு என் பெயரையே வைத்துவிடும் வாய்ப்பும் உள்ளது" என்று திட்டம் போட்டார். ஓவியக் குருவியை தன் அலுவலக அறைக்கு எடுத்துச் சென்றார். ஆனால் பிறகு, பறவைகளைப் பற்றி தானே எழுதிய புத்தகங்களைப் புரட்டி புரட்டி படிப்பதில் மெய்மறந்து போனார். இதைப் பார்த்த குருவி வெளியே பறந்தது.

ஓவியக் குருவி சோகமாக கண்ணீருடன் பறந்து கொண்டே இருந்தது. அப்போது வானத்தில் ஏதோ பறப்பதைப் பார்த்தது. "மிகப் பெரிய வெள்ளைப் பறவை. அது எனக்கு உதவக் கூடும்" என்றெண்ணியது. ஆனால் அந்த வெள்ளைப் பறவை வெகுவேகமாக பறந்து மேகக் கூட்டத்தில் மறைந்துவிட்டது.



ஓவியக் குருவி மிகவும் களைத்துவிட்டது. பறக்க முடியவில்லை. கலங்கிய கண்களுடன் நின்றிருந்த குருவியின் அருகில் ஒரு சிறுவனும் ஒரு பூனையும் வந்தார்கள்.

குருவியின் நல்லநேரம் பூனைக்கு முன்னால் சிறுவன் வந்தது தான். குருவியின் கதையை கேட்ட சிறுவனுக்கு சட்டென்று ஞாபகம் வந்துகிட்டது! “உன் இடம் – அதாவது உன் நண்பர், ஓவியர் வீடு எனக்கு தெரியும். வா என்னுடன்” என்றான்.

அதே நேரம் ஓவியர் வீட்டுக்கு வந்த பணக்காரர் மிகவும் கோபத்துடன் இருந்தார். “அழகான குருவி ஓவியம் என்று வாங்கினேன். இப்போது அதில் குருவியைக் காணோம்” என்று சத்தம் போட்டவர் ஓவியத்தை திரும்ப கொடுத்து பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டார் .





பணக்காரர் வெளியேறிய அதே நேரம்
பின்வாசல் வழியாக சிறுவனும் குருவியும்
உள்ளே வந்தார்கள். மட்டற்ற மகிழ்ச்சியில்
ஓவியர் சிறுவனை கட்டித் தழுவிக்
கொண்டார். குருவியும் ஆனந்தமாக
ஓவியத்தில் போய் உட்கார்ந்து கொண்டது.

இனி ஒருபோதும் அந்த ஓவியத்தை விற்கப் போவதில்லை என்று ஓவியர் வாக்குக் கொடுத்தார். தானும் இனி பறந்து போகமாட்டேன் என்று உறுதி அளித்தது குருவி. “எப்போதாவது ஒரு முறை இறக்கைகளை விரித்துக் கொள்ளவோ நீங்கள் வரையும் ஓவியத்தைப் பார்க்கவோ மட்டும் வெளியே வருவேன்” என்றது குருவி.

நண்பர்கள் இருவரும் கடைசிவரை இணைபிரியாமல் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள்



முற்றும்.

